## <u>கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் அலுவலகம் தஞ்சாவூர்.</u>

## <u>வாகனஏல விற்பனைக்குழு</u>

தஞ்சாவூர் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் கால்நடை அலுவலகத்தில் உள்ள முதிர்ந்த நிலையில் கழிவு செய்யப்பட்ட TN–01 G–2345 அம்பாசிடர் கார் 02.08.2022 காலை 11.00 மணியளவில் மண்டல இணை இயக்குநர் அலுவலக வளாகத்தில் பொது ஏலமிடப்படவுள்ளது.

### <u>ஏல நிபந்தனைகள்</u>

1. டெண்டர் மற்றும் ஏலவிண்ணப்ப படிவங்களை தஞ்சாவூர் கால்நடை பாராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் ரூ,100/- மட்டும் செலுத்தி 22-07-2022 முற்பகல் 10 மணிமுதல் 29-07-2022 பிற்பகல் 5 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
2. ஏலம்விடப்படவுள்ள வாகனம் மற்றும் ஏலநிபந்தனைகள் ஆகியவற்றை 22-07-2022 முற்பகல் 10 மணிமுதல் 29-07-2022 பிற்பகல் 5 மணிவரை அலுவலக வேலைநாட்களில் பார்வையிடலாம்.
3. வாகனம் உள்ளது உள்ளபடியே, (as it is where it is condition) மூடி முத்திதையிடப்பட்ட டெண்டர் மற்றும் ஏலமுறையில் விறபனை செய்யப்படும்.
4. டெண்டர் மற்றும் ஏலவிற்பனையில் பங்கெடுக்க விருப்பமுள்ளவர்கள் ஆதார் எண் ,பான் எண், GST எண் அசல் மற்றும் நகலுடன் பொது ஏலத்தில் கலந்துகொள்ளவேண்டும்.
5. டெண்டா மற்றும் ஏலவிற்பனையில் பங்கெடுக்கவிருப்பமுள்ளவர்கள் முன்வைப்புத்தொகையாக,(EMD) ரூ,20,000/-மட்டும் மண்டல இணை இயக்குநர்,கால்நடைபராமரிப்பத்துறை,தஞ்சாவூர்.payable at Thanjavur என்ற பெயரில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில், வங்கி வரைவோலை (Demand Draft) 01-08-2022 பிற்பகல் 05.00 மணிக்குள் அலுவலகத்திற்கு கிடைக்கத்தக்க வகையில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
6. முத்திரையிடப்பட்ட உறையில்,ஒப்பந்தபுள்ளி (டெண்டர்) வைத்து அனுப்பப்படும் உறையின்மீது 'Aplication For Tenter" ) என்று எழுதி மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், பழைய கோர்ட் ரோடு, தஞ்சாவூர் - 613 001 என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். காலதாமதமாக அனுப்பப்படும் ஒப்பந்த புள்ளிகள் ஏற்கப்படமாட்டாது.
7. 02–08–2022 அன்று முற்பகல் 11.00 மணிக்கு தஞ்சாவூர் மண்டல இணை இயக்குநர் அலுவலக வளாகத்தில் வாகன ஏல விற்பனை குழு மற்றும் டெண்டர் படிவம் கொடுத்து வருகை புரிந்துள்ளவர்கள் முன்னிலையில் வாகன டெண்டர் திறக்கப்படும்.
8. அதிகபட்ச டெண்டர்/ஏலம் எடுக்கும் நபருக்கே ஏலம்முடிவு செய்யப்படும்.ஏலத்தில் தேர்வு செயயப்பட்டவர் முழுத்தொகையையும் சேவை மற்றும் சரக்குவரி (GST-18%) சேர்த்து வரைவோலை (Demand Draft) மூலமாக ஏழு தினங்களுக்குள் செலுத்திட வேண்டும்.
9. ஏலம் எடுத்தவர் தனது சொந்த செலவிலேயே வாகனத்தை எடுத்து செல்ல வேண்டும்.
10. ஏலம் எடுத்தவர் அதனை வேறு ஒருவருக்கு மறு ஒப்பந்தம் செய்ய இயலாது.
11. ஏலம் எடுத்த நபரால் பண்ணையின் இதர சொத்துகளுக்கு இழப்பு ஏற்பட்டால் அவரது முன்பணம் திரும்ப தரமாட்டாது.
12. டெண்டர்/ஏலம் உறுதி செய்யப்பட்ட நபர் குறிப்பிட்ட நாளில் முழுத்தொகையையும் செலுத்தி வாகனத்தை தன் பொறுப்பில் பெற்றுக்கொள்ள தவறினால்,மறுடெண்டர் மற்றும் பொதுஏலம் மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்படும்.மேலும் ஏலம் எடுத்தவர் செலுத்திய முன்வைப்புத்தொகை எக்காரணத்தை கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.
13. முன்வைப்புத்தொகைக்கு வட்டி தரப்படமாட்டாது.டெண்டர் மற்றும் ஏலம் உறுதி செய்யப்பட்டவர் தவிர்த்து மற்றவர்கள் செலுத்திய முன் வைப்புத்தொகை அன்றே வங்கிவரைவாக திரும்ப தரப்படும்.
14. நிர்வாக காரணங்களினால் ஏலம் தடைப்பட்டாலோ, ஏலத்தொகை நிர்ணயம் செய்யப்பட்ட ஏலத்தொகைக்கு குறைவு என கருதப்பட்டாலோ, ஏலத்தை தள்ளி வைக்கவோ, ரத்து செய்யவோ இப்பண்ணை துணை இயக்குநருக்கு முழு அதிகாரம் உண்டு.
15. ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் அரசு அறிவுறுத்தலின்படி முகக்கவசம் மற்றும் தனிநபர் இடைவெளியை கட்டாயம் கடைபிடிக்கவேண்டும்.
16. மத்திய / மாநில அரசு ஊழியர்கள் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் எவரும் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
17. வாகனத்தை ஏலம் எடுத்த ஏலதாரர் தனது சொந்த செலவிலேயே வாகனத்தை அலுவலக வளாகத்திலிருந்து எடுத்து செல்லவேண்டும்.தாமதிக்கும் பட்சத்தில் ஏலமிடப்பட்ட வாகனத்திற்கு நிர்வாகம் பொறுப்பேற்க இயலாது.

குறிப்பு: ஏலவிற்பனை குழு உறுப்பினர்களான,தஞ்சாவூர் மண்டல இணை இயக்குநர், தஞ்சாவூர் அரசு தானியங்கி பணிமனை தானியங்கி பொறியாளர், தஞ்சாவூர் வட்டார போக்குவரத்து அலுவலர்,மற்றும் உதவி இயக்குநர் கால்நடை பராமரிப்புத்துறை ஆகியோர் முன்னிலையில் 02-08-2022 அன்று ஏலம் நடைபெறும்.

| | |
|---|---|
| டெண்டர் மற்றும் ஏலவிற்பனை அறிவிப்பு வெளியிடுதல். | 20-07-2022. |
| வாகனத்தை ஏலம் எடுக்க விருப்பம் உள்ளவர்கள் பார்வையிடும் காலம். | 22-07-2022 முதல் 29-07-2022 வரை அலுவலக வேலைநாட்களில் முற்பகல் 10.00 மணிமுதல் பிற்பகல் 5.00மணிவரை. |
| வாகன டெண்டர் மற்றும் ஏல விற்பனையில் பங்கெடுப்பதற்கான விண்ணப்பம் பெறும் காலம். | 22-07-2022 முதல் 01-08-2022 பிற்பகல் 5 மணிவரை. |
| டெண்டர் மற்றும் ஏல விற்பனை நடைபெறும் இடம் | மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், பழைய கோர்ட் ரோடு, தஞ்சாவூர் - 613 001. |
| டெண்டர் மற்றும் ஏல விற்பனை நடைபெறும் நாள். | 02-08-2022 முற்பகல் 11 மணி. |

மண்டல இணை இயக்குநர்,(கூ/பொ)/குழுத்தலைவர்.
ஏலவிற்பனைக்குழு.